வீரகுமாரர்கள் வரலாறு

கட்டுரை ஆக்கம் :
R.B. ரவி ராமகிருஷ்ண குமார்
காயத்ரீ பீட ஜாதக பரிவர்த்தனை இணையதளம்
தேவாங்க குல வரலாற்று ஆய்வாளர்
செய்தி மற்றும் தகவல் தொடர்பு பிரதிநிதி,
அ.தே.ஸ்ரீ சௌடேஸ்வரி நற்பணி மன்றம்

ஸ்ரீ சௌடேஸ்வரி அம்மனுக்காக வீரகுமாரர்கள் உருவான வரலாறு நம்முடைய தேவாங்க அவதாரங்கள் ஏழு ஆகும் . இவ்அவதாரங்களை **சப்தாவதாரம்** என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

1. தேவல அவதாரம் 2. வித்யாதர அவதாரம், 3. புஷ்ப தந்த அவதாரம்

4. வேதாள அவதாரம் 5. வரருசி அவதாரம் 6. தேவசாலி அவதாரம்

7. தாசமைய்ய

அவதாரம் என்பன சப்த அவதாரங்கள் ஆகும். ஏழாவது அவதாரமான தாசமைய்ய அவதார காலத்தில் ஒருமுறை அவர் வண்ண சித்ர விசித்ரமான ஆடையை நெய்து ஸ்ரீ சைல மல்லிகார்ஜுன மூர்த்திக்கு கொடியாக ஏற்றினார். இக்கொடித் துணியின் பேரழகில் மயங்கிய பலர் அத்துணிக்கு விலை மதிப்புக் கூற முற்பட்டு ஒருவர் இக்கொடித்துணிக்கு ஈடாக, விலையாக மூன்று உலகையும் வழங்கலாம் என்று கூறி மூன்று விரலைக் காட்டினார். உடன் எம்பெருமானின் சக்கரம் தோன்றி மூன்று விரலையும் துண்டாக்கியது. அது தேவாங்கர் நெய்த அந்தத் துணிக்கு விலை ஏது? தேவாங்கரின் சேவைக்கு என்றும் விலை கூற முடியாது அல்லவா ? தேவர தாசமைய்யன் முன்பு, கொடித்துணியின் அழகில் மகிழ்ந்த மல்லிகார்ஜுன மூர்த்தி தோன்றி "என்ன வரம் வேண்டும்?" எனக் கேட்டார். தேவாங்கன் என்றும் உலக உபகாரமானவன் அல்லவா ? அற்புதமான வரம் தெய்வீக வரம் என்ன தெரியுமா? "இறைவா! கண்ணுதல் பெருமானே! இந்த ஸ்ரீ சைலத்தில் மல்லிகார்ஜுன மூர்த்தி என்ற திருநாமத்துடன் விளங்குகின்றாய். நீ என் தலைநகர் ஆமோத நகருக்கு எம்குலத்திற்கு உரிமையான இராமலிங்கேஸ்வரராக எழுந்தருள வேண்டும். என் இடப்புறத்தை அலங்கரிக்கும் அன்னை; என் குலதெய்வம். தேவாங்கரின் குலமகள் ஸ்ரீ சௌடேஸ்வரியாக எழுந்தருள வேண்டும் 'என்பதை வரமாக வேண்டினார்.

இறைவன் மல்லிகார்ஜுன மூர்த்தி மகிழ்ந்து, "தேவாங்கரே! உம் கோரிக்கைப்படி நான் ராமலிங்கேஸ்வரராக உம்முடன் வருகின்றேன். ஆனால் அன்னை வருகின்றாளா என்பதை அவளிடமே கேட்டுக் கொள்க" என்றார். தேவர தாசமைய்யன் பௌராம்பிகை அன்னையின் திருவடி தொழுதார். "அன்னையே! இத்தலத்தில் உன் திருநாமம் பௌராம்பிகை. நீ என் குலமகள் என் குலதெய்வம் ஸ்ரீ சௌடேஸ்வரியாக என்னுடன் ஆமோத நகர்க்கு எழுந்தருள வேண்டும் . ' என வேண்டினார். "மகனே! உன்னுடன் வருகின்றேன். ஆனால் என்னைத் திரும்பிப் பாராமல் அழைத்துச் செல்ல வேண்டும்" என்று அருளினாள். "ஆயினும் தாயே நீர் வருவதை நாம் எவ்வாறு தெரிந்து கொள்வது" என தேவாங்கர் வேண்ட "என் பாதச்சிலம்பொலியைக் கேட்டு அழைத்துச் செல்க. எனத் திருவாய் மலர்ந்தாள். தேவாங்கர் புடைசூழ மங்கல வாத்ய. வேத, சாஸ்திர முழக்கங்களுடன் இப்புனித ஊர்வலம் புறப்பட்டது. ஸ்ரீ சைலத்தில் இருந்து இராமலிங்கேஸ்வரர், ஸ்ரீ சௌடேஸ்வரி அன்னை என அனைவரும் ஆமோத நகர் நோக்கி நடந்தனர்.

சோதனை என ஒன்று இல்லை எனில் ஒரு சம்பவத்தில் சுவராசியம் இல்லாமல் போய்விடும் அல்லவா ? ஆம் சோதனை காட்டாறு வடிவில் வந்தது. காட்டாற்றில் வெள்ளம். அன்னை அதில் இறங்கி நடந்தாள். அவள் திருவடிகள் நீரினுள் இருந்ததால் சிலம்பொலி வெளியில் கேட்கவில்லை. அன்னை பின் தொடர்கிறாளா? இல்லையா? என்பதைக் காண நம்மக்கள் அவள் ஆணையை மீறித் திரும்பிப் பார்த்தனர் . அந்ததோ ! அன்னை நீரினுள் மறைந்தாள். தவியாய் தவித்தனர் நம் மக்கள் அழுதனர், அரற்றினர், புலம்பினர். இவ்வேதனையைக் கண்டு தாளாத இராமலிங்கேஸ்வரர், குலமக்களே ! நீங்கள் அவள் ஆணையை மீறியதால் மனவருத்தம் உற்று நீரினுள் மறைந்து இருக்கிறாள். நீங்கள் தான் கையில் வாளாயுதங்களை வைத்து இருக்கின்றீர்களே ! அவற்றால் உங்கள் அங்கங்களை வீராவேசத்துடன் சேதித்துக் கொள்ளுங்கள். உங்கள் தியாகத்தைக் கண்டு அவள் உங்களுக்கு அருள் வழங்குவதற்கு தரிசனம் தந்து விடுவாள். என்று அருளினார். ஐயனின் ஆலோசனை பின்பற்றப்பட்டது. வாளாயுதங்களை உருவிய தேவாங்கர்கள் தங்களின் அங்கங்களை அவற்றால் சேதித்துக் கொண்டனர். பாம்மா பா ! தல்லி பராக் ! என்ற முழக்கங்கள் விண்ணை அதிரச் செய்தன . தேவாங்கரின் அங்கங்கள் சிதறி விழுந்தன. தலை, தோள்கள், மார்பு என பல இடங்களில் வாளாயுதங்கள் பாய்ந்தன. குலமக்களின் பக்தியால், வீர ஆவேசத்தால் அன்னை நீரில் இருந்து தோன்றினாள். அன்னை நமக்கு மீண்டும் கிடைத்து விட்டாள். அவள் நமக்கு மீண்டு வந்தது நீரில் இருந்து என்பதனால் இன்றும் நாம் சக்தி அழைப்பது நீர் நிலையில் இருந்துதான் அழைக்கிறோம்.

ஸ்ரீ இராமலிங்கேசுவரர் ஆலோசனையால் அவள் நமக்கு மீண்டும் தரிசனம் தந்ததால் நன்றி அறிதலுடன் ஸ்ரீ இராமலிங்கேசுவரர் திருநாமத்தை முன்னர் வைத்து ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி என்று அழைக்கின்றோம். மறைந்த அன்னையை நீரில் இருந்து மீண்டும் தோன்றச் செய்தது தேவாங்க வீர குமாரர்களின் அலகு சேவைதான் காரணம் ஆகும். எனவே வீரகுமாரர்கள் அன்றும் இன்றும் இனி என்றும் திருவிழாவினுக்குச் சிறப்புச் செய்பவர்கள் ஆகின்றார்கள். இன்றும் சக்தி அழைப்பில் பாதச் சிலம்பொலி கேட்டு அன்னையை அழைத்து வருவதைக் காட்ட சிலம்பு ஒலி சேர்க்கப்படுகிறது. சக்தி அழைப்புப் பேழையை எடுத்து வருபவர்க்கு தேவ தாசமைய்யன் வேடம் இடுகின்றோம். புனித நீர்க்கரகம் "கத்திய கும்ப" ஏந்தி வரும் தேவாங்கப் பெண்மணிகள் ஸ்ரீ சௌடேஸ்வரி ஸ்ரீ சைலத்தில் இருந்து நடந்து வருவதைக் குறிப்பிடுகின்றார்கள். பாம்மா பா! தல்லி பராக்!! என்பன அன்னையை அழைப்பதையும் அவள் நடந்தருளி வருவதையும் காட்டுகின்றன. வீரகுமாரர்களின் இன்றைய அலகு சேவை அன்று தேவாங்கர்கள் அங்கங்களைச் சேதித்துக் கொண்டதைக் குறிக்கும். திருவிழாவின் கொலுப்பந்தல்தான் அன்றைய ஆமோத நகர் கொலு ஆகும். தேவாங்க குலத்தில் உதித்த ஆண்கள் அனைவரும் வீரகுமாரர்கள் ஆவார்கள். அலகு சேவையை மிகப்பெரும் பாக்கியமாகக் கருதுகின்றோம்.

மஹா பிரதோஷ சிவமலர்கள் 51

1. அசோக மலர்
2. கழுநீர் (அல்லி மலர்)
3. அவரை மலர்
4. அவுரி மலர்
5. மருதோன்றி மலர்
6. அகத்தி மலர்
7. ஆடாதொடை மலர்
8. ஆவாரம் பூ
9. கரிசிலாங்கண்ணி மலர்
10. கவிழ் தும்பை மலர்
11. குருந்த மலர்
12. ஆகாயத்தாமரை
13. மஞ்சள் மல்லிகை மலர்
14. திலம் (எள்) மலர்
15. கரந்தை மலர்
16. களற்சி மலர்
17. அலரி பூ (அரளி)
18. இலவன் மலர்
19. வழுதுணை (கத்திரி) மலர்
20. கல்யாண முருங்கை மலர்
21. உன்மத்த மலர்
22. அந்திமந்தாரை
23. இருவாட்சி மல்லிகை மலர்
24. அனிச்சை மலர்
25. கடம்ப மலர்
26. வெண்தோன்றி மலர்
27. கஸ்தூரி மஞ்சள் மலர்
28. தேவதாளி மலர்
29. செம்பரத்தை மலர்
30. சரக்கொன்றை மலர்
31. துத்தி மலர்
32. செண்பக மலர்
33. வெட்சி (தெத்தி) மலர்
34. சாமந்தி மலர்
35. சீதாதேவி செங்கழுநீர் மலர்
36. சூரியகாந்தி மலர்
37. கற்றாழை (குமரி) மலர்
38. மகிழம் மலர்
39. புன்னை மலர்
40. குங்கும மலர்
41. மனோகரஞ்சித மலர்
42. வில்வ மலர்
43. பூசணி மலர்
44. சங்கு புஷ்பி
45. குறுகத்தி மலர்
46. அருக்கன் மலர்
47. மைக்கொன்றை மலர்
48. கோஷ்ட மலர்
49. சாம்பிராணி மலர்
50. உருத்திராக்ஷ மலர்
51. தாமரை மலர்